

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | மார்ச் 18, 2021 | புரட்சி 20 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00


# இழந்தது போதும்; இருண்டது போதும்!

# தி.மு.க. அணியே நமது ஒளி விளக்கு!

*தமிழ்நாட்டை உ.பி., இராஜஸ்தான், உத்தரகாண்ட் போல வடநாட்டு மாநிலங்களின் வரிசையில் நாம் சேர்க்கப் போகிறோமா? அல்லது நமது தனித்தன்மையைக் காப்பாற்றப் போகிறோமா? – இதுதான் தேர்தல் களத்தில் நம்முன் உள்ள கேள்வி!*

- நம் தமிழ்நாட்டில் வங்கி அலுவலகங்களில், தொடர்வண்டித் துறையில் மத்திய அரசு அலுவலகங்களில் திருவெறும்பூர், நெய்வேலி, ஆவடி பகுதிகளில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களில் அண்மைக்காலமாக தமிழர்களைவிட வடநாட்டுக்காரர்களுக்கே வேலை வாய்ப்புகள், போதாக்குறைக்கு தமிழ்நாட்டு அரசு வேலைகளிலும் தமிழ் தெரியாத பிற மாநிலத்தவரும் சேரலாம் என்று உத்தரவு போட்டுவிட்டது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி.

- உதய் மின் திட்டம், உணவுப் பாதுகாப்பு சட்டம் என்ற மாநில உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களை ஏற்க மறுத்தார் ஜெயலலிதா. அவர் மருத்துவமனையில் இருக்கும்போதே ஒப்புதல் தந்துவிட்டது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி.

  இதற்கு முற்றுப் புள்ளி வைக்க தமிழகத்தில் அனைத்து தொழில் நிறுவனங்களிலும் 75 சதவீத வேலை வாய்ப்புகளை தமிழர்களுக்கே வழங்குவோம் என்று கூறுகிறது, தி.மு.க. தேர்தல் அறிக்கை.

- மறக்க முடியுமா? கிராமத்து குடிசையில் கழிப்பறை வசதிகூட இல்லாத வீட்டில் படித்து 1200க்கு 1176 மதிப்பெண் பெற்ற நம் அன்புத் தங்கை பாசத்துக்குரிய மகள் அனிதாவை நாம் மறக்க முடியுமா? ‘நீட்’ தேர்வு, அவர் மருத்துவக் கனவை சிதைத்தது. உச்சநீதிமன்றம் வரை போராடினார். உயிரை மாய்த்தார். தொடர்ந்து 15 இளம் சகோதரிகளின் உயிரை ‘நீட்’ தேர்வு பலி வாங்கியது. தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு தரமாட்டோம் என்று இறுமாப்புடன் மறுத்தது மோடி ஆட்சி. இப்போது பல் மருத்துவம், பி.எஸ்.சி. ‘நர்சிங்’, சித்த மருத்துவம் என்று மேலும் மேலும் நுழைவுத் தேர்வைத் திணிக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் காலில் போட்டு மிதித்த பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து வருகிறது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி!

  முதல்வராக இருக்கும் வரை ‘நீட்’ தேர்வை தடுத்தார் ஜெயலலிதா. ஆனால் எடப்பாடி ஆட்சியோ டெல்லிக்கு பணிந்தது.

  தி.மு.க. வெற்றி பெற்றால் முதல் சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே ‘நீட்’ தேர்வை ரத்து செய்யும் தீர்மானம் வரும் என்று உறுதி கூறுகிறது, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் வெளியிட்ட தேர்தல் அறிக்கை!

- உலகம் முழுதும் கச்சா எண்ணெய் படுவீழ்ச்சி அடைந்த போதே பெட்ரோல், டீசல் விலையை குறைக்க முன்வரவில்லை மோடி ஆட்சி. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியும் அதற்கு துணை போனது. ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு மத்திய அரசு விதிக்கும் வரி மட்டும் ரூ.32. மாநில அரசு விதிப்பது ரூ.15.35 காசு. உலகிலேயே இந்தியாவில்தான் பெட்ரோல்-டீசலுக்கு 69 சதவீதம் வரி விதித்து மக்களை மூச்சுத் திணற வைக்கிறார்கள். விலை உயர்வு நியாயமானதுதான் என்று தொலைக் காட்சிகளில் ஈவிரக்கமின்றி திமிருடன் பேசிய பா.ஜ.க.வினரையும் அவர்களுக்கு பக்கமேளம் வாசித்த அ.இ.அ.தி.மு.க.வினரையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள்.

  இப்போது ஆறுதலான செய்தி வந்திருக்கிறது. பெட்ரோலுக்கு ரூ.5 ரூபாய், டீசலுக்கு ரூ.4 ரூபாய் வரியைக் குறைக்கும் அறிவிப்பை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறுகிறது!

- சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை பிப்ரவரியில் மட்டும் 3 முறை உயர்த்தியது மோடி ஆட்சி. அடுத்த மார்ச் மாதமே மீண்டும் ஏற்றியது. எடப்பாடி ஆட்சியோ ஒரு வார்த்தை கண்டனம்கூட தெரிவிக்கவில்லை. இப்போது ஆட்சி முடியப் போகும் கட்டத்தில் 6 சிலிண்டர் இலவசம் என்று நாடகம் போடுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் ஏன் இது பற்றி கவலைப்படவில்லை என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் உண்டா?

  இப்போது தி.மு.க. தேர்தல் அறிக்கை - சிலிண்டருக்கு ரூ.100 மான்யம் தருவதாக அறிவித்திருக்கிறது. ஒரு நிம்மதிப் பெருமூச்சு!

- ‘கொரானா’ காலத்தில் தமிழ்நாடு தவித்தது; வறுமையிலும் பசியிலும் மக்கள் வாடினார்கள்; ரூ.5000/- நிதி வழங்கி இந்த மக்களைக் காப்பாற்றுங்கள் என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் முன் வைத்த கோரிக்கையை எடப்பாடி ஆட்சி ஏற்க மறுத்தது. வெறும் ஆயிரம் ரூபாய் உதவியுடன் முடித்துக் கொண்டது. “பணத்தைக் கவரில் போட்டுத் தர மாட்டோம்; வேண்டுமானால் கடனை திருப்பித் தர கால நீட்டிப்பு தருகிறோம்” என்று இறுமாப்புடன் தமிழக பா.ஜ.க. பேச்சாளர்கள் பேசினார்கள். நிர்மலாவும் நீட்டி முழங்கினார்.

  அது மட்டுமா? பிழைப்புக்கு தமிழ்நாடு வந்த வடமாநிலத்துக்காரர்கள் கையில் காசின்றி, பல நூறு மைல் நடந்தே சுமைகளைத் தாங்கி குடும்பத்துடன் நடந்தே போனார்களே! சென்னை நகரங்களிலிருந்து அகதிகள் போல ஏழை எளிய மக்கள் கிராமங்களுக்கு திரும்பினார்களே! மறக்க முடியுமா? உதவிட முன் வந்ததா மத்திய மாநில ஆட்சிகள்! நீண்ட போராட்டத்துக்குப் பிறகு சிறப்பு இரயில் விட்டது மோடி ஆட்சி! பசி-பட்டினியுடன் உயிர் திரும்பிய மக்களுக்கு ‘டிக்கட் கட்டணம்’ செலுத்தி விட்டு இரயிலில் ஏறச் சொன்ன கொடுமையாளர்கள் அல்லவா இவர்கள்? இவர்கள்தான் தமிழ்நாட்டு மக்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள்.

  அந்த நேரத்தில் மக்களுக்கு பசிப்பிணி போக்கிட உதவிக்கரம் நீட்டியது யார்? சிறு சிறு இயக்கங்கள்; தொண்டு நிறுவனங்கள்; தி.மு.க.- தமிழ்நாடு முழுதும் ‘ஒன்றிணைவோம் வா’ திட்டத்தின் வழியாக மக்களைக் காப்பாற்ற முன் வந்தது.

- தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையோடும் உணர்வுகளோடும் பிரிக்க முடியாத கொள்கை இடஒதுக்கீடு. இது தான் தமிழ்நாட்டை வளர்த்தது; நமது மக்களின் முன்னேற்றப் பாதைக்கு வழி திறந்தது. மருத்துவக் கல்லூரி உயர்பட்டப் படிப்பில் - அண்ணா பல்கலைக்கழக எம்.டெக். வகுப்புகளில் - பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை மறுக்கிறது மோடி ஆட்சி. அய்.அய்.டி.களில் இடஒதுக்கீடே இனி இருக்காது என்று ‘ஆய்வுக் குழு’ போட்டு முடிவு செய்து விட்டார்கள்.

  இவற்றுக்கெல்லாம் ஆறுதலும் நம்பிக்கையும் தருகிறது தி.மு.க. தேர்தல் அறிக்கை. மருத்துவக் கல்லூரிகளின் மொத்த இடங்களையும் மாநிலத் தொகுப்புக்கு மாற்றப்படும். முதல் தலைமுறை பட்டதாரிக்கு வேலை வய்ப்பில் முன்னுரிமை; பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 40 சதவீத ஒதுக்கீடு; என்று உறுதி தருகிறது தி.மு.க. தேர்தல் அறிக்கை.

- சமஸ்கிருதம் பேசும் மாநிலம் ஒன்றுகூட இந்தியாவில் இல்லை. 25,000 பேர் மட்டுமே பேசுவதாகக் கூறுகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் ரூ.643.84 கோடி இந்த மொழிக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு. இதே காலத்தில் தமிழ் மொழிக்கு ஒதுக்கப்பட்டது 22 கோடி மட்டுமே. தமிழ் உள்ளிட்ட ஏனைய மொழிகளுக்கு ஒதுக்கப்பட்டதைவிட சமஸ்கிருதத்துக்கு 22 மடங்கு அதிகம். இந்த சமஸ்கிருதத் திணிப்பை தொடர்ந்து தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், இயக்கங்கள் எதிர்த்தன. எடப்பாடி ஆட்சி மவுனம் சாதித்தது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலேயே இந்தியைத் திணித்தது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. எதிர்ப்புக்குப் பிறகு பணிந்தது.

- ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்த ஊடக நெறியாளர்கள் மிரட்டப் பட்டனர். பலர் வேலையை விட்டே விலக நேரிட்டது. பெரியார் சிலைகள் தொடர்ந்து அவமதிக்கப்பட்டன. வள்ளுவர் சிலைக்கும் எம்.ஜி.ஆர். சிலைக்கும் காவி சாயம் பூசினார்கள்.

- வரி விதிப்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், பல்கலைக்கழகங்கள் என மாநில அரசுகளின் உரிமைகளை மோடி ஆட்சி பறித்தது; எடப்பாடி ஆட்சி மவுனம் சாதித்தது.

- 2020-2021க்கு தமிழ்நாட்டுக்கு ஜி.எஸ்.டி.யில் வரவேண்டிய பங்கு எவ்வளவு தெரியுமா? ரூ.15,475 கோடி. இதற்கு பதிலாக சிறப்புக் கடன் வழங்கும் முறையில் ரூ.5,239.92 கோடி கடனாக தரப்பட்டுள்ளது என்கிறார் நிதியமைச்சர் நிர்மலா! தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய வரியை வாரி சுருட்டிவிட்டு, மூன்றில் ஒரு பங்கை கடனாகப் பெற்றுக் கொள் என்கிறது மோடி ஆட்சி. ஆக, தமிழ்நாட்டு பங்குக்கு பட்டை நாமம்! தட்டிக் கேட்க தயாராக இல்லை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. நன்றாக உதவுவதாக ‘ஜால்ரா’ தட்டினார்கள்.

- வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களுக்கு தமிழகம் கேட்ட நிதியில் சொற்பத் தொகையே ‘பிச்சை’யாக போடப்பட்டது, மோடி ஆட்சி.

- இவை மட்டும் தானா? நாடாளுமன்றத்தில் காஷ்மீர் சிறப்பு உரிமையை பறித்த போதும், குடியுரிமை சட்டத்தில் மதத்தை திணித்து இஸ்லாமியரையும், தமிழர் என்பதால் ஈழத் தமிழர்களையும் தனிமைப் படுத்தும் சட்டம் வந்தபோதும், மாநில உரிமைகளைப் பறிக்கும் வேளாண் சட்டங்கள் வந்த போதும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி கண்களை மூடிக் கொண்டு மோடிக்கு ‘ஜே’ போட்டது; மாநில உரிமைகளைக் காவு கொடுத்தது.

  அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆமாம்; தமிழர்களே, இது வந்து போகிற தேர்தல் அல்ல; தமிழ்நாட்டை மீட்டெடுக்கும் தேர்தல்!

தமிழ்நாட்டின் வாழ்வுரிமையை சமூக நீதியை தமிழ்நாட்டின் அடையாளத்தை பாதுகாக்கப் போகிறோமோ, பறி கொடுக்கப் போகிறோமா? என்று முடிவு கட்டும் தேர்தல்.

தேர்தல் களம் தெளிவாக பிரிந்து நிற்கிறது.

நாம் தி.மு.க. அணியையே ஆதரிப்போம்!

அந்த அணியே இப்போது நமது ஒளிவிளக்கு!

# பூசாரிகளைத் தாழ்த்தி ‘அர்ச்சகர்’களை உயர்த்துவதுதான் ‘இந்து’க்களின் நலனா?

‘இந்துக்களின் விரோதி தி.மு.க.’வை வீழ்த்த வேண்டும் என்று கூக்குரல் போடுகிறது, பா.ஜ.க.! வேல் தூக்கிக் கொண்டு யாத்திரை போனார்கள்; ஓட்டு வங்கிக்கு முருகக் கடவுளை துணைக்கு அழைத்தார்கள்; மக்கள் திரும்பிக் கூட பார்க்கவில்லை; குத்தாட்டம் போட்டதுதான் மிச்சம்!

யார் ‘இந்து’ விரோதி என்று பார்ப்போமா?

- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் பிறப்பால் இந்துக்கள் தான். இந்த மக்களின் இடஒதுக்கீடு உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, தாய்மொழி உரிமை, பண்பாட்டு உரிமைகளை முற்றிலும் பறிப்பது, பா.ஜ.க. ஆட்சி.
- ‘அம்மா’வின் ஆட்சி என்று பேசும் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்களும் முன்னணி தலைவர்களும் பார்ப்பனிய வைதிக சடங்குகளை செய்கிறார்கள். அவர்களை மட்டுமே அழைத்து யாகம், பூஜைகளையும் நடத்துகிறார்களே தவிர, பார்ப்பனரல்லாத இந்து ‘பூசாரி’கள் பக்கம் திரும்பிப் பார்ப்பதுகூட கிடையாது.
- நைவேத்தியம் செய்யும் பணியாளர்கள் பதவிக்கு ‘பிராமணர்கள்’ மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என்று இந்த ஆட்சி இந்து அறநிலையத் துறை வழியாக பத்திரிகை விளம்பரம் தருகிறது; பிறகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு வந்தவுடன் உத்தரவை திரும்பப் பெறுகிறது.
- கிராமக் கோயில்களில் பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பூசாரிகள் வறுமையில் வாடுகிறார்கள். கலைஞர் முதல்வராக இருந்தபோது இவர்களுக்காக ‘பூசாரி நல வாரியம்’ ஒன்றை அமைத்தார். 10 ஆண்டுகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அது முடங்கிக் கிடக்கிறது.
- 4000 பேருக்கு மட்டுமே ஓய்வூதியம். இவர்களில் சிலர் மரணமடைந்தால் மட்டுமே மற்றவர்களுக்கு ஓய்வுதியம் என்ற நிலை. இந்த அவலத்தைப் போக்க 15,000 பூசாரிகளுக்கு ஓய்வூதியம் தர வேண்டும் என்று பூசாரிகள் நல சங்கம் வைத்த கோரிக்கையை ஏற்கவில்லை. ‘பிராமணர்’ கோரிக்கை என்றால் ‘கோப்பு’கள் பறந்திருக்கும்.
- கொரானா காலத்தில் பல பூசாரிகள் வறுமையால் நோயால் இறந்தனர். முதுமையடைந்தோர் உயிர் வாழ ஓய்வூதியம் கேட்டனர்; கிடைக்கவில்லை. கோயில் உண்டியல் வருமானம் முழுவதையும் அறநிலையத் துறை எடுத்துப் போய் அதிகாரிகளிடம் கட்டி நல்ல பெயர் வாங்கிக் கொண்டது. ஆனால், தில்லை நடராசர் கோயிலில் நாள்தோறும் உண்டியலில் விழும் பல்லாயிரக் கணக்கான ரூபாய் உண்டியல் பணத்தில் அரசு ஒரு ‘பைசா’ கூட கேட்க முடியாது. தீட்சதர் கும்பல் அவ்வளவையும் ஏப்பம் விடுகிறது.
- இந்து அறநிலையத் துறை நடத்தும் வழிபாட்டுக்கான பயிற்சி முகாம்களில் பூசாரிகள் பங்கேற்க விடாமல் தடுக்கப்படுகிறார்கள். ‘பிராமண’ அர்ச்சகர்களுக்கு மட்டுமே வாய்ப்பு.
- பூசாரிகளையும் அறநிலையத் துறை ஊழியர்களாகக் கருதி ஏன் மாத ஊதியம் வழங்கக் கூடாதா என்று கேட்கிறார்கள் பூசாரிகள்.
- தி.மு.க. ஆட்சியில் கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ‘வணிகப் பயன்பாடு’ என்ற அடிப்படையில் கூடுதல் மின் கட்டணம் வாங்கி, அதை செலுத்த வருமானமின்றி பல கிராம கோயில்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன என்று புலம்புகிறார்கள் பூசாரிகள்.
- கிராமக் கோயில்களில் ‘திருப்பணி’ என்ற பெயரில் பெறப்படும் நன்கொடைக்கு ‘ஜி.எஸ்.டி.’ வரி போடுகிறது ‘இந்து’க்களின் காவலனாகக் கூறிக் கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி! ஆனால் அயோத்தியில் இராமன் கோயில் கட்ட பல்லாயிரக்கணக்கில் நிதி வசூல்; அதற்கு ‘ஜி.எஸ்.டி.’யும் கிடையாது; வருமான வரியும் கிடையாது.
- அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை வேண்டும். அதன் மூலம் ‘சூத்திரர்’ கர்ப்பகிரகத்துக்குள் நுழைந்தால் அது ‘தீட்டாகி’ விடும் என்ற இழிவு ஒழிக்கப்பட வேண்டும் என்று போராடினார் பெரியார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு ஒரே ஒரு அம்மன் கோயிலில் மட்டும் ஒரு பிற்படுத்தப்பட்டவர் அர்ச்சகர் ஆனார். ‘பிராமணர்’களாகப் பிறந்த காரணத்தால் அர்ச்சகர் பயிற்சி பெற்றவர்களுக்கு உடனே அர்ச்சகர் ஆகி விட்டார்கள். 200 பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் வேலையின்றி காத்துக் கிடக்கிறார்கள். இப்படி பார்ப்பனரல்லாத ‘இந்து’ பூசாரிகளை புறக்கணித்துவிட்டு இந்து ‘வைதிக மதவாத’ கூட்டத்தை தலைமீது தூக்கி வைத்து ஆடுவது ஏன்? ஏன் இந்த பாகுபாடு?

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் இரண்டு முக்கிய அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன.

14 ஆண்டுகளாக உரிய பயிற்சி பெற்று அர்ச்சகர் பணிக்கு காத்திருப்போருக்கு அர்ச்சகர் பணிகள் வழங்கப்படும் என்பது ஒரு அறிவிப்பு.

வைதிக வேத வழிபாட்டு முறைகளையும் உருவ வழிபாட்டையும் சமஸ்கிருதத் திணிப்பையும் எதிர்த்து பக்தி மார்க்கத்தில் மகத்தான சீர்திருத்தத்திற்கு வித்திட்ட வள்ளலாரின் ‘சுத்த சன்மார்க்க சங்கம்’ இயங்கும் வடலூரில் ‘வள்ளலார் சர்வதேச மய்யம்’ உருவாக்கப்படும் என்பது மற்றொரு அறிவிப்பு.

**சங்கரமடம் சங்கராச்சாரிகள் கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளானாலும் அதற்கு சர்வதேசப் புகழை ஏற்ற முயலும் பார்ப்பனியத்துக்கு பதிலடியாக வரப் போகிறது ‘வள்ளலார் சர்வதேச மய்யம்’!**

வைதிகத்தின் காலடியில் வீழ்ந்து கிடப்பது தான் இந்துக்களின் நலனா? அல்லது ஒடுக்கப்பட்ட இந்து மக்களின் சுயமரியாதைப் பாதையில் அழைத்துச் செல்வதுதான் இந்துகளின் நலனா?

## பட்டினிப் போராட்டம் நடத்தும் அம்பிகையை சாக விடாதே!

# இங்கிலாந்து தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கடந்த பிப். 27ஆம் தேதி முதல் இலண்டனில் ஈழத்தமிழரும் இன அழிப்புத் தடுப்பு மற்றும் தண்டனைக்கான சர்வதேச மய்யத்தின் இயக்குனருமான அம்பிகை செல்வக்குமார், நான்கு முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து பட்டினிப் போராட்டம் நடத்தி வருகிறார். தற்போது அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் கூட்டம், பிப். 22 முதல் ஜெனிவாவில் நடந்து வரும் நிலையில் இந்தக் கோரிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கை அரசின் இனப் படுகொலை குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்; இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்திய இனப்படுகொலை, மனித உரிமை மீறல்களுக்கான சாட்சியம், தடயங்களை அழித்து விடாமல் பாதுகாக்க அய்.நா. இலங்கையில் பன்னாட்டு கண்காணிப்பு அமைப்பு ஒன்றை அமைக்க வேண்டும்; தொடர்ந்து இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க அய்.நா.வின் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும்; அனைத்துத் தரப்பு ஈழத் தமிழர் மக்களிடமும் சுயநிர்ணய உரிமை குறித்து கருத்து கேட்கும் வாக்கெடுப்பை அய்.நா. கண்காணிப்பில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து அம்பிகை போராடி வருகிறார். அய்.நா.வில் இலங்கை உள்ளிட்ட இணைத் தலைமை நாடுகளுக்கு தலைமைப் பொறுப்பு நாடாக இருக்கும் இங்கிலாந்து - அய்.நா.வில் மனித உரிமை ஆணையத்தின் முன் விவாதத்துக்கு வரும் தீர்மானத்தைத் தயாரித்துள்ளது. இத்தீர்மானம் மிகவும் நீர்த்துப் போகும் நிலையில் இலங்கையைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கிறது என்று அனைத்துலக தமிழர்களும் கண்டித்துள்ளனர்.

அய்.நா.வில் மனித உரிமை ஆணையத்தின் தலைவராக சிலி நாட்டைச் சார்ந்த மிசேல் பசேலே என்ற பெண் இருக்கிறார். அவர் கடந்த ஜனவரி மாதம், மனித உரிமை ஆணைய சார்பில் வெளியிட்ட அறிக்கையில் குற்றங்களுக்கு பொறுப்பு ஏற்காமல் இலங்கை அரசு அலட்சியம் காட்டுகிறது என்று கடுமையாகக் குற்றம் சாட்டியிருந்தார். போர்க் குற்றத்தில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு தந்து இலங்கை அரசு மரியாதை அளித்திருப்பதையும் சுட்டிக் காட்டினார். குற்றச்சாட்டுக்குள்ளான இராணுவத்தினரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவர்கள் வெளிநாடு தப்பி ஓடாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கிறது என்று கூறியது அந்த அறிக்கை. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் அறிக்கையை கருத்தில் கொள்ளாமல் இங்கிலாந்து அரசு மென்மையான தீர்மானத்தை வடிவமைத்திருப்பது போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்றும் நடவடிக்கையேயாகும். இந்தப் பின்னணியில் பட்டினிப் போராட்டம் நடத்தி வரும் அம்பிகையின் கோரிக்கைகளை ஏற்று அவரது உயிரைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்று சென்னையில் இங்கிலாந்து தூதரக வாயில் அருகே ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம், கடந்த மார்ச் 12, 2021, பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர் சரசுவதி (நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்), செந்தில் (தமிழ்த் தேச மக்கள் முன்னணி), ஜெகன்ராஜ் (மக்களரசு கட்சி), க. அருணபாரதி (தமிழ்த் தேசிய பேரியக்கம்), சேகர் (தொழிலாளர் சீரமைப்பு இயக்கம்) உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர்.

கழக சார்பில் தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன், தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, அருண், மனோஜ், கோபி, கன்னியப்பன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். இறுதியில் இங்கிலாந்து தூதரக அதிகாரிகளிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

அய்.நா. மனித உரிமைக் குழுவில் இந்தியா ஒரு உறுப்பு நாடாக இடம் பெற்றுள்ள நிலையில் இலங்கை அதிபர் கோத்தபயே, பிரதமர் மோடியிடம் தொடர்பு கொண்டு அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக வரும் தீர்மானத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவான நிலை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக ஏடுகளில் செய்திகள் வெளி வந்துள்ளன.

### சட்டசபை ஜனநாயகம்!



எங்கள் நாட்டிலே வந்து உட்கார்ந்து கொண்டு எப்படி எப்படியோ தந்திரமாய் அதிகாரத்தை, ஆதிக்கத்தை கைப்பற்றிக் கொண்டு தகுதியில்லாதவனுக்கெல்லாம், அயோக்கியர்களுக்கெல்லாம், அவர்கள் பார்ப்பன அடிமைகள், கூலிகள், பிரச்சாரத்தால் பிழைக்க வேண்டிய கூலிகள் என்பதற்காகவும், அவர்களுக்கு பதவியும், செல்வாக்கும், பெருமையும் கொடுத்து வருவது என்றால் என்ன நியாயம்? உள்ளபடி யோக்கியன் ? திறமைசாலிகள், நல்லவர்கள் வெளியே தலைகாட்ட முடியவில்லையே! நாம் கேட்டால், நீ சட்டசபைக்கு வாயேன், வந்து உன் காரியத்தை செய்து கொள்ளும் என்றா சொல்வது ?

அந்த சட்டசபை யோக்கியதை தான் என்ன? சென்ற தடவை நடைபெற்ற தேர்தலிலே காங்கிரசின் கதி என்னவாயிற்று? காங்கிரஸ் தோற்றுப்போய் எதிர்க் கட்சிகள்தானே மெஜாரிட்டியாய் இருந்தன?

உண்மையிலேயே யோக்கியமான ஆட்சியாய் இருந்தால் ஜனநாயகத்தை உள்ளபடியே கருதுபவர்களாக இருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? மெஜாரிட்டியாய் இருந்த காங்கிரஸ் எதிர்ப்பாளர்களைக் கூப்பிட்டல்லவா மந்திரி சபை அமைத்திருக்க வேண்டும்? அதை விட்டு தேர்தலிலே நிற்காத ஒருவரை சட்டத்திற்கு, சட்டத் தத்துவத்திற்கு விரோதமாக கவர்னர் கவர்னர் நாமினேஷன் என்பதன் மூலமாகப் பதவிக்கு கொண்டுவந்து மந்திரிசபை அமைக்கப்பட்டு விட்டது!

இதுதான் சட்டசபையின் யோக்கியதை!

**பெரியார் – 1954**

## ‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (5)

# வர்ணாஸ்ரமத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற குரல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே இருந்தது

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி – தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் – பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி-மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

பார்ப்பனியம் ஒரு பாசிசம்தான் என்ற கருத்துடைய கம்யூனிஸ்டுகளும் இருந்தார்கள். அதில் இருவர் பற்றிக் கூற வேண்டும். அப்துல் ராப் என்ற ஒருவர் இங்கிருந்து மூன்றாம் அகிலத்திற்கு பார்வையாளராகத் தான் போகிறார். பிரதிநிதியாகப் போகவில்லை. அவர் அறிக்கை ஒன்றை இங்கிருந்து அனுப்பி இருக்கிறார். அந்த அறிக்கையில் அவர் சொல்லுகிறார். “இந்திய தொழிலாளர்கள் ஒன்பது கோடி என்று மதிப்பிடப்பட்டது - பாகிஸ்தான் அப்போது இந்தியாவோடு (பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்) இருந்தது - அவர்கள் செய்யும் வேலையின் தன்மையின் காரணமாக அவர்கள் ஒரு வர்க்கம் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் இந்தியாவில் எத்தனை ஜாதிகளும் சமயங்களும் உள்ளனவோ, அத்தனை ஜாதியினராகவும் மதத்தினராகவும் உள்ளனர். வைதீக பார்ப்பனர்களைப் போலவே அவர்களும் (தொழிலாளர்களும்) ஜாதிப் பிணைப்பில் உள்ளனர். தொழிலாளர்களைக் குறிப்பிடுகிறார். இந்த பாட்டாளி வர்க்கம் ஜாதி உணர்வை மட்டுமே கொண்டுள்ளது வர்க்க உணர்வை அல்ல. மறுபுறம், அது ஆழமான அறியாமையி லும் பெரும் மூடநம்பிக்கையிலும் ஆழ்ந்துள்ளது. இந்த பாட்டாளி வர்க்கம் விரும்புவது, சோசியலிசப் புரட்சி அல்ல. மாறாக தங்களை முதலாளிகள் ஆக்கும் புரட்சியைத் தான்” என அவ்வறிக்கையில் அப்துல் ராப் எழுதியுள்ளார். அவர் இன்னும் எழுதுகிறார். இந்த பாட்டாளி வர்க்கம், வர்க்க உணர்வு கொண்டது அல்ல. உண்மையிலேயே அது வர்க்கமே அல்ல. சோசியலிச கருத்துக்களை பரப்புரை செய்ய முன் வருபவரைக் கண்ட உடனே, அவர்களை நசுக்குவதில் முதலாவதாக இருப்பது இந்த தொழிலாளி வர்க்கம்தான். வீடோ அடுப்பங்கரையோ இல்லாத - ஜாதியோ மதமோ வரலாறோ, பாரம்பரியமோ இல்லாத 5.3 கோடி தீண்டத்தகாதவர்கள் தான் இந்தியாவின் உண்மையான பாட்டாளிகள். சோசியலிசத்துக்கான வளமான மண் இவர்கள்தான். ஒரு வர்க்கமாக அமையக்கூடியவர்கள் வர்க்க உணர்வு பெற்றுவிட்டால், இந்தியாவில் உள்ள சமூகத் தீமைகளுக்கும், பிற வர்க்கங்கள் அனைத்திற்கும் எதிரான சக்திவாய்ந்த ஆயுதமாக அமைவர். எனவே சாதீயத்திற்கு எதிராக அவர்களை பிணைத்து வைத்திருக்கிற வர்ணாசிரமத்திற்கு எதிராக நாம் நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்று அறிக்கை தருகிறார்.

இன்னொருவர் விரேந்திர நாத் சட்டோபாத்தியாயா. அவர் எழுதுகிறார். இந்த சமுதாயத்திலுள்ள அனைத்து வர்க்கங்களும் பாரம்பரியமான நான்கு முக்கிய வர்ணங்களான, பார்ப்பன, வைசிய, சத்திரிய, சூத்திரர் என்று பிரிக்கப்பட்டுள்ளனர். ஓர் ஏழைப் பார்ப்பனன் தனக்கும் தன் சொந்த சாதியை சேர்ந்த பணக்காரர்களுக்கும் பொதுவாக நலன்கள் இருப்பதாக உணர்கிறானேயன்றி, தனக்கும் தன் வர்க்கத்தை ஒத்த இன்னொரு ஜாதியை சார்ந்த ஏழைக்கும் பொது நலன்கள் இருப்பதாக உணர்வதே இல்லை. அப்படி தான் இங்கே தொழிலாளர் வர்க்கம் இருக்கிறது. அப்படி தான் அவர்களை வைத்திருக்கிறார்கள் என்று அவர் எழுதுகிறார்.



இந்த இரண்டு அறிக்கை சொல்வது மட்டுமில்லாமல், தோழர்களே, இன்னொரு செய்தி. அதோடு 1930-ம் ஆண்டில் இந்தியா குறித்து மூன்றாம் அகிலம் Draft Platform of the Action of the Communist Party of India என்று வழிகாட்டல் ஒன்றினைக் கொடுக்கிறார்கள், அதனை 1930களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது வேலைத் திட்டமாக ஏற்றுக் கொண்டது. அந்த ஆவணம் கூறியது, ஜாதி அமைப்பை, - சீர்திருத்தப்பட்ட காந்திய வழியில் நிலவும் ஜாதி அமைப்பை - ஈவிரக்கமின்றி ஒழித்துக் கட்டுதல் என்பதே மூன்றாம் அகிலம் கொடுத்த அறிவுரை யாகும். விவசாய புரட்சி, பிரிட்டீஷ் ஆட்சி பலாத்காரமாக தூக்கி எறிதல் ஆகியவை மட்டுமே, உழைக்கும் பறையர்கள் அடிமைகள் ஆகியோரின் முழுமையான சமூக பொருளாதார பண்பாட்டு விடுதலைக்கு இட்டுச்செல்லும். எனவே ஜாதி அமைப்பை முக்கியமாக காந்திய வகையில் நிலவும் ஜாதி அமைப்பை, அதை ஒழிப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி நடக்கவில்லை என்பதுதான் இங்கு நடந்தது. அப்பொழுது எப்படி அதை பெரியார் மாற்றிப் பார்த்தார் என்பதற்கு தான். அதில்லாமல், எங்கோ தொலை தூரத்தில் இருக்கிற மார்க்ஸ், எங்கோ இருந்து எழுதுகிறார். அவருக்கு இங்கே மனு சாஸ்திரம் சொல்வதெல்லாம் தெரிந்திருக்கிறது. இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய தன்னுடைய ‘மூலதனம்’ நூலில் அவர் என்ன எழுதுகிறார் என்றால், சூத்திரன் பார்ப்பானையும் பசுவையும் காப்பாற்றுவதற்காக உயிர்த்தியாக செய்வதையே மோட்சத்திற்கு போவதற்கு வழி என்று நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று சொல்லிவிட்டு, மனு சாஸ்திரம் அத்தியாயம் பத்து, சுலோகம் 62இல் சொல்லியிருக்கிறது என்று மார்க்ஸ் சொல்லியிருக்கிறார் ‘Das Capital’ Volume II-வில் எழுதுகிறார். ஆனால் இங்கிருக்கிறவர்கள் அதை ஏன் புரிந்துக் கொள்ளவில்லை என்று ஒரு கேள்வியாகத் தான் பார்க்கிறோம்.

- **ஜாதி அமைப்பை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று 1930லேயே கம்யூனிஸ்ட் கட்சி வேலைத் திட்டமாக ஏற்றது.**
- **‘பிராமணர்’களுக்கு வர்க்க உணர்வு இருப்பது இல்லை என்றார் மூத்த தலைவர் விரேந்திர நாத் சட்டோபாத்தியாயா.**
- **மார்க்ஸ், தனது ‘மூலதனம்’ நூலிலேயே ‘மனு சாஸ்திரம்’, சூத்திரர்களின் மூளையில் திணிக்கப்பட்டதை சுட்டிக் காட்டுகிறார்.**

இன்னொன்று, அப்படியே நாம் இங்கே பொறுத்திப் பார்த்து விட முடியுமா? பெரியார் அதைத் தான் அடிக்கடி கேட்டார். துருவக் காடுகளில் இருக்கிற ஊசி இலைக் காட்டை பார்த்துவிட்டு, இராமநாதபுரத்தில் நடுவதற்கு கம்யூனிஸ்ட்காரர்களெல்லாம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள், என்று. அவர் சொல்கிறார். பனி பிரதேசத்தில் இருக்கிறதய்யா ஊசி இலைக்காடு. அதைக் கொண்டுவந்து இராமநாதபுரத்தில் நடுவதென்றால், அது எப்படியய்யா வரும் அதைத் தான் அவர் சொல்கிறார். இன்னொரு எடுத்துக் காட்டு, லெனின் அவர்களின் துணைவியார் க்ருப்ஸ்கயா குறிப்பு ஒன்று எழுதுகிறார்.

“1860-லேயே மார்க்சின் நூல்கள் ரஷிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. ஆனால் ரஷிய நிலைக்கு ஏற்றவாறு மார்க்சிய நூல்கள் எழுதப்பட வில்லை. ஆனால் ‘ரஷியாவில் முதலாளித்துவ வளர்ச்சி’ என்னும் நூலை எழுதி, இந்த காரியத்தை லெனின் பூர்த்தி செய்தார்” என்று எழுதுகிறார். அதை அப்படியே இங்கு பொருத்திப் பார்க்க முடியவில்லை என்கிறார். அதுபோலவே பெரியார் சொன்னதைத் தான் இங்கு பொருத்திப் பார்க்கவேண்டும்.

விவசாய தொழிற்சங்கத்தை சேலத்தில் சிவதாபுரம் என்கிற ஊரில் பெரியார் கூட்டுகிறார். அந்தக் கூட்டத்தில் பேசுகிறார்:

“மார்க்சும் லெனினும் சதிக்கென்று ஒரு ஜாதி இல்லாத நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆதலால், அவர்கள் சதிகாரர்களின் சதிச் செயலுக்கும் தொழிலாளர் ஜாதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அழுத்தப்பட்டு கிடப்பதற்கும் பரிகாரம் சொல்ல வேண்டிய அவசிய இல்லாதவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அது இல்லை. சதிக்கென்றே ஒரு ஜாதி இங்கே இருப்பதைப் போல அவர்கள் நாட்டில் இல்லை. மார்க்சும் பார்க்கவில்லை லெனினும் பார்க்கவில்லை. ஆதலால் முதலாளி-தொழி லாளி பேதம் மட்டும் இல்லாமல் முதலாளித் தன்மையில் ஜாதி உயர்வு-தாழ்வு பேதம் நடப்பு இருக்கிற போதும், மார்க்ஸ் சொன்னபடி தான் செய்யவேண்டும், லெனின் என்ன சொன்னாரோ அதன்படி தான் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தால், என்ன அர்த்தம். இது சதிகார ஜாதிக்கு அனுகூலமாகத்தானே ஆகும்?” என்று பெரியார் கேட்கிறார்.

(இதைப் பேசிக் கொண்டிருந்தால், பார்ப்பானுக்குத் தான் அனுகூலமாக இருக்கும். இதைப் பேசினால் அவனுக்கு வசதி தான். என்னை தொடாமல் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள். ஒரு பிரச்சனையும் கிடையாது எங்களுக்கு, என்று இருந்து விடுவார்களே என்று அவர் கேள்வி வைக்கிறார். ஏனென்றால், எதனால் இந்த மாற்றம் என்பதற்கு, சில எதிர்பார்ப்புகள் தவறாகப் போய் விடுகின்றன.) அந்த நாட்டின் நிலைமைக்கு ஏற்ப ஏங்கல்ஸ் சொன்னார், “பாட்டாளி வர்க்கப் புரட்சி எல்லாம் முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் ஒரே சமயத்தில் நிறைவேற்ற முடியும்” என்று அவர் நினைத்தார். அதைத் தான் அங்கே ட்ராட்ஸ்கியும் சொல்லிக் கொண்டிருந்தார். பின்னாளில் அது மாறியது. லெனின் அதை மாற்றிக் கொண்டார். புதிய வரலாற்று நிலைமைகளில் ஏகபோக முதலாளித்துவ காலப் பகுதியில் சோசியலிசப் புரட்சியானது ஒரு சில நாடுகளில் அல்லது தனிநாட்டில்கூட வெற்றி பெற முடியும் என்றார். அதை எதிர்த்து பேசிய ட்ராட்ஸ்கி தான் தனியாகப் போக ஆரம்பித்தார். அவர் permanent revolution என்று சொன்னார். லெனின் தனியாகக்கூட நடத்த முடியும் என்று சொன்னார்.

அதற்குப் பின்னால் வந்த மாவோ இன்னும் வேறுபட்டவராக இருந்தார். அவர் நேபாளக் கல்விக் குழுவோடு பேசிய உரையாடல் ஒன்று, அது ஒரு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது, தமிழ் வடிவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். “நான் ஏற்கனவே சொன்னது போல், சாதாரண மக்களிடமிருந்து நாம் கற்றுத் தெரிந்ததைத் தவிர நம்மிடம் வியக்கத்தக்கது ஏதுமில்லை”. மாவோ சொல்கிறார். நேபாளத்திலிருந்து ஒரு கம்யூனிச கல்வியாளர் குழு ஒன்று போகிறது. அவர்களோடு விவாதிக்கிறார்.

“நாம் சிறிதளவு மார்க்சிய லெனினியம் கற்றிருந்தாலும், மார்க்சிய லெனினியம் மட்டுமே பயன்படாது. Of course, we have learnt a little Marxism and Leninism, but Marxism and Leninism alone won't do” என்று சொல்லுகிறார். நாம் சீனாவின் உண்மைகளை மற்றும் பண்புகளிலிருந்து சீனப் பிரச்னைகளை ஆராய்ந்தாக வேண்டும், என்பதை நான் கொள்கையாகக் கொண்டேன். நான் படித்தேன், உண்மைதான், அந்த கருத்து வைத்திருக்கிறேன், ஆனால் சீனாவின் நிலைகளிலிருந்து தான் இந்தப் புரட்சி தொடங்க முடியும் என்பதை அறிந்துக் கொண்டேன். மக்களிடமிருந்து தெரிந்துக் கொண்டுதான், போராட்டத்தை கட்டினேனே தவிர, வெறும் அதில் சொன்னதை அப்படியே நான் செய்யவில்லை, என்பதை நேபாளத்திலிருந்து போன போராட்டக் குழுவின் தத்துவ சிந்தனையாளர்களுக்காக அவர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் நாட்டில் அதைச் செய்ய வேண்டுமென்றால், உங்கள் நாட்டு சூழலுக்காக மாற்றிக் கொள்ளுங்கள், நான் சொல்லுகிற அறிவுரைகளை எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று சொல்லி அனுப்புகிறார்.

(தொடரும்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 18.03.2021

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# உதயநிதி ஸ்டாலின் கழகத்தின் ஆதரவு கேட்டார்



சேப்பாக்கம் தொகுதி திமுக வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின், இராயப்பேட்டை, வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்திற்கு வருகை தந்து, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பின், கழக மாவட்டச் செயலாளர் இரா. உமாபதியைச் சந்தித்து கழக ஆதரவை கேட்டுக் கொண்டார். அவருக்கு கழகத் தலைவர் கொளத்தூர்மணியின் ‘கருஞ்சட்டை கலைஞர்’ நூல் வழங்கப்பட்டது.

## டாக்டர் எழிலனை சந்தித்து தோழர்கள் ஆதரவு




சென்னை, ஆயிரம் விளக்கு திமுக வேட்பாளர் டாக்டர் எழிலன் அவர்களை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் சந்தித்து ஆதரவை தெரிவித்தனர்.

தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், தென் சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் மயிலை சுகுமார், மயிலை இராவணன் உட்பட சென்னை கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

## அதியமானுக்கு கழகத் தோழர்கள் ஆதரவு



வருகின்ற சட்ட மன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் போட்டியிடுகிற ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான் அவர்களை, திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, சென்னை கழகத் தோழர்களுடன் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## பொள்ளாச்சி தி.மு.க. வேட்பாளர் கழகத் தலைவருடன் சந்திப்பு



பொள்ளாச்சி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் வரதராஜ், பொள்ளாச்சியில் நடந்த ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை சந்தித்து ஆதரவு கேட்டார்.

## சென்னை பல்கலைக் கழகத்தில் விடுதலை இராசேந்திரன் உரை

சென்னை பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறை சார்பில், பேராசிரியர் கருணானந்தத்தின் புத்தவியல் மற்றும் திராவிடவியல் அறக்கட்டளைச் சொற்பொழிவு 05.03.2021 வெள்ளிக்கிழமை காலை 10:30 மணியளவில் சென்னை பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. ‘திராவிட இயக்கத்தின் சமூகச் சட்டங்கள்’ என்ற தலைப்பில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஒன்றரை மணி நேரம் விரிவாக உரையாற்றினார்.



# ‘தளி’ தொகுதியில் கிரிமினல் பேர்வழி சி.பி.அய். வேட்பாளரா?

தளி சட்டமன்ற தொகுதியில் திராவிடர் விடுதலைக் கழகம் தேர்தல் புறக்கணிப்பு என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இந்தத் தொகுதியில் பா.ஜ.க.வை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தளி. இராமச்சந்திரனை அறிவித்துள்ளமை அதிர்ச்சியடைய வைக்கிறது.

2012ஆம் ஆண்டு ஜுலை 5ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகமாக செயல்பட்டபோது கிருஷ்ணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனி எனும் பழனிச்சாமி, தளி.இராமச்சந்திரனின் மக்கள் விரோத செயல்பாடுகளை எதிர்த்துப் போராடியதால் துப்பாக்கியால் சுட்டும் தலையைத் துண்டித்தும் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தளி.இராமச்சந்திரன், குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். அந்த வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. 600 கோடி ரூபாய் கிரானைட் கொள்ளை வழக்கும் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது.

1992இல் நாகமங்கலத்தைச் சார்ந்த என்.சி.ராமன் கொலை செய்யப்பட்டார். இதில் தளி.இராமச்சந்திரனும் குற்றம் சாட்டப்பட்டார். கொலையை நேரில் பார்த்த என்.சி.ராமன் தம்பி சந்திரசேகர், பல்வேறு அச்சுறுத்தல்களையும் மீறி சாட்சி கூறியதால் அவரும் ஒசூர் பேருந்து நிலையத்தில் மக்கள் முன் வெட்டி கொல்லப்பட்டார். அப்போது தளி. இராமச்சந்திரன் தனது பெயருள்ள வேறு ஒரு இராமச்சந்திரனை ஆள்மாறாட்டம் செய்து சரணடைய வைத்து தப்பித்துக் கொண்டார். இந்த ஆள்மாறாட்டம், தோழர் பழனி கொலைக்குப் பிறகு மீள் விசாரணை செய்ததில் தளி.இராமச்சந்திரனையும் அதற்கு உடந்தையாக இருந்த காவல்துறை அதிகாரிகளும் குற்றவாளியாக்கப்பட்டு, குற்றப்பத்திரிக்கை மாற்றப்பட்டு இப்போது வழக்கு நடந்து வருகிறது. ரியல் எஸ்டேட் தொழிலுக்காக இப்பகுதி விவசாயிகளை மிரட்டி நிலங்களைப் பறித்த குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் தளி.இராமச்சந்திரன்.

ஒசூர் நீதிமன்ற விசாரணையில் தளி.இராமச்சந்திரனும் அவரது ஆட்களும் குறுக்கீடு செய்வதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு விசாரணை சேலம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. மக்களை அச்சத்தின் பிடியில் தளி. இராமச்சந்திரனும், அவரது ஆட்களும் வைத்திருப்பதாக உச்ச நீதிமன்றமே கருத்து தெரிவித்தது. 2006ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட தளி.இராமச்சந்திரன் ’சீட்’ கேட்டபோது தொகுதி உடன்பாட்டில் சி.பி.ஐ கட்சிக்கு அத்தொகுதி சென்றது. சி.பி.ஐ மாவட்ட செயலாளர் நாகராஜ் ரெட்டி சி.பி.ஐ சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சுயேட்சையாக போட்டியிட்டு பணபலத்தால் வெற்றி பெற்றார். தளி.இராமச்சந்திரன் தோழமை கட்சி வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டதால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, அவரை கட்சியிலிருந்து நீக்கியது. ஆனால் சொந்த கட்சி வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டு தோற்கடித்தவரையே கட்சியில் சேர்த்துக் கொண்டது சி.பி.அய். தியாகத் தழும்புகளும், எளிமையும் நிறைந்த தோழர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி, பணபலம் என்ற ஒற்றைக் காரணத்துக்காக கிரிமினல் கொலை வழக்குகளில் சிக்கியுள்ள தளி.இராமச்சந்திரனை பொதுவுடமை “புரட்சியாளராக்கி” களம் இறக்கியுள்ள நிலையிலும், அங்கே எதிர் வேட்பாளராக பாரதிய ஜனதா கட்சி உள்ள நிலையிலும் திராவிடர் விடுதலைக் கழகம் இந்தத் தொகுதியில் தேர்தல் புறக்கணிப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

தோழர் நல்லக்கண்ணு போன்ற நேர்மையான தலைவர்கள் இருக்கும் கட்சியில் தளி.இராமச்சந்திரன் கட்சியின் வேட்பாளரா என்ற வேதனையான கேள்வியையும் எழுப்ப வேண்டியிருக்கிறது.

# அம்பிகை போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் இங்கிலாந்தில் உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அம்பிகையின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஈரோடு மாவட்டம், காந்தி சிலை, கருங்கல்பளையத்தில் 13.03.2021 சனிக்கிழமை காலை 10 மணிக்கு, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில்,கணகுறிஞ்சி-பெரியாரிய உணர்வாளார் கூட்டமைப்பு, தலைமை வகித்தார். சலிம் - மனித நேய மக்கள் கட்சி,சசி - மனித நேய ஜனநாயகக்கட்சி, சுப்பு- தமிழக விவசாயிகள் சங்கம், சீனிவாசன் - தமிழக வாழ்வுரிமை கட்சி, மாசிலாமணி - திராவிடர் பேரவை, வீரவேந்தன் - ஆதிதமிழர் கட்சி, பொன் கதிரவன்- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜாபர் - விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ. கணேசமூர்த்தி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் கு. இராமகிருஷ்ணன், தற்சார்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பொன்னையன், நீரோடை தலைவர் நிலவன், தமிழர் கழகம் கட்சித் தலைவர் தமிழ்ச் செல்வன், புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பாளர் வழக்கறிஞர் செயப்பிரகாசம் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றினர்.

திராவிடர் கழக பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 18th March 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN